தினத்தந்தி
ஞாயிறு

# திகைக்க வைக்கும் 'தேசப் பொக்கிஷம்'



விஜயலெட்சுமிக்கு அப்போது 19 வயது. திருமணமாகி புகுந்த வீட்டிற்கு வந்த புதிது. அவரது கையில் கணவர் எம்.எல்.ராஜேஷின் சம்பள விவர குறிப்பு கிடைக்கிறது. பார்த்தவருக்கு அதிர்ச்சி.

"நீங்கள் மத்திய அரசு நிறுவனத்தில் வேலை செய்வதை நினைத்து ரொம்ப சந்தோஷப்பட்டேன். ஆனால் உங்கள் இந்த மாத சம்பள பட்டியலைப் பார்த்தால் கடன்களுக்காக நிறைய பணத்தை பிடித்தம் செய்திருக்கிறார்களே. உங்கள் சம்பள நிலவரம் இப்படி இருந்தால், எதிர்காலத்தில் நாம் குழந்தைகள் பெற்றுக்கொள்ளும் போது அவர்களுக்காக நம்மிடம் சேமிப்பு எதுவும் இருக்காதே.." என்று கவலையோடு கணவரிடம் கேட்க, அவரோ மனைவியிடம், "அவசரப்படாதே..! நமது குழந்தைகளுக்காக நான் பணத்தை சேமித்து வைக்கவில்லை என்பது உண்மைதான். ஆனால் எதிர்கால சந்ததிக்காக நான் பெரும் பொக்கிஷத்தையே சேமித்துவைத்திருக்கிறேன். அதற்காக நான் சில லட்சங்கள்தான் கடன் பட்டிருக்கிறேன். ஆனால் நான் சேமித்திருப்பவை கோடிக்கு மேல் மதிப்புமிக்கவை. எத்தனை கோடிகள் கொடுத்தாலும் இப்போது அவை கிடைக்காது.." என்றபடி, தான் சேமிப்புகளை மனைவியிடம் திறந்து காட்ட, ஆச்சரியத்தில் மூழ்கிப்போனார், விஜயலெட்சுமி. உடனே கழுத்தில் கிடந்த புத்தம்புது தங்க சங்கிலியையும் கழற்றிக்கொடுத்து, "தேவைப்பட்டால், இதையும் பயன்படுத்திக்கொள்ளுங்கள்" என்று இன்ப அதிர்ச்சி கொடுத்தார்.

அந்த ஆச்சரியத்திற்கும், இன்ப அதிர்ச்சிக்கும் காரணம் காந்திஜி. ராஜேஷ் சேமித்து பாதுகாப்பவை உலக நாடுகள் அனைத்தும் வெளியிட்டிருக்கும் காந்திஜியின் அபூர்வ தபால்தலைகள்.

"உலகத்தில் எந்த தலைவருக்கும் கிடைக்காத மிகப்பெரிய கவுரவம் காந்திஜிக்கு கிடைத்திருக்கிறது. 120 நாடுகள் 400–க்கு மேற்பட்ட விதவிதமான ஸ்டாம்புகளை காந்திஜியை பெருமைப்படுத்தும் விதத்தில் வெளியிட்டுள்ளன. தங்க இழைகளாலும், பிகாசோ ஓவியங்களாலும் ஸ்டாம்புகளை உருவாக்கி, காந்திஜியை கவுரவப்படுத்தியிருக்கிறார்கள். அவை ஒவ்வொன்றின் பின்னாலும் அபூர்வ சம்பவங்களும், அரிதான விஷயங்களும் இருக்கின்றன.." என்று அவர் ஒவ்வொரு ஸ்டாம்பையும் எடுத்துக்காட்ட, அவை பிரமிக்க வைக்கின்றன. பல நாடுகள் காந்திஜி உருவம் பொறித்த தங்க, வெள்ளி நாணயங்களை வெளியிட்டுள்ளன. பளபளப்பாக இருக்கும் அவைகளையும் அள்ளி கைகளில் எடுத்துக்காட்டுகிறார், ராஜேஷ். அவை விலைமதிப்பற்றவை!



குடும்பத்தினருடன் இடது ஓரத்தில் ராஜேஷ்.





"காந்திஜிக்கு 70 நாடுகளில் சிலை வைத்திருக்கிறார்கள். எந்த நாட்டில், எந்த இடத்தில் சிலை வைக்கப்பட்டிருக்கிறது. அங்கு அந்த சிலை வைக்கப்பட என்ன காரணம் என்பதை எல்லாம் நான் தொகுத்துவைத்திருக்கிறேன்" என்றபடி ஒவ்வொரு சிலை மாதிரியையும் காட்டி விளக்கத் தொடங்குகிறார்.

இவரிடம் இருக்கும் போட்டோ ஆல்பங்கள், 'காந்திஜி இப்படி எல்லாம் அபூர்வமாக காட்சி கொடுத்திருக்கிறாரா?' என்று திகைக்கவைக்கும் விதத்தில் இருக்கிறது. 400–க்கு மேற்பட்ட அரிதான போட்டோக்களை அடுக்கி வைத்து பாதுகாக்கிறார்.

"காந்திஜி எழுதிய கடிதங்கள், அவருக்கு வந்த தந்திகள், அவர் கையெழுத்திட்ட குறிப்புகள் போன்றவைகளையும் நான் நிறைய வைத்திருக்கிறேன்.." என்று ஒவ்வொன்றையும் எடுத்துக்காட்டுகிறார்.

கண்காட்சி நடத்தும் அளவிற்கு இவர் வைத்திருக்கும் பொக்கிஷங்கள் எல்லாம், கும்மிடிப்பூண்டி அருகில் உள்ள புது கும்மிடிப்பூண்டியில் உள்ள ராஜேஷின் வீட்டில் இருக்கிறது. அந்த சிறிய வீடு காந்திஜியின் ஆத்மா வாழும் இடமாகத் திகழ்கிறது.

ராஜேஷ்– விஜயலெட்சுமி தம்பதிகளுக்கு இரண்டு குழந்தைகள் ஸ்ரீஅரிஷா, ராகுல்ராம்.

காந்திஜி தொடர்புடைய இவ்வளவு அபூர்வ விஷயங்களை உங்களால் எப்படி சேகரிக்க முடிந்தது?

"சிறுவயதிலே எனக்கு அபூர்வமாகத் தெரிந்தவைகளை எல்லாம் சேகரித்தேன். எனக்கு நினைவு தெரிந்தபோது உலகத்திலே எந்த தலைவருக்கும் கிடைக்காத பெருமைகள் காந்திஜிக்கு கிடைத்ததை கண்டறிந்தேன். அதனால் காந்திஜி தொடர்புடைய பொக்கிஷங்களை தேடுவதில் என் முழு கவனத்தையும் செலுத்தினேன். இந்தியா முழுக்க சுற்றினேன். இது எங்களது பல வருட உழைப்பு. காந்திஜியிடம் தனிச் செயலாளராக பணிபுரிந்த பெரியவர் வி.கல்யாணம் எனக்கு சில பொக்கிஷங்களை கொடுத்து உதவியிருக்கிறார். நண்பர்களும் எனக்கு தோள்கொடுக்கிறார்கள்" என்கிறார், ராஜேஷ். இவரது பெற்றோர்: எம்.லோகநாதன்– லட்சுமிதேவி.

"காந்திஜியின் ஆத்மா தொடர்புடைய இந்த பொக்கிஷங்களை உலகம் முழுவதும் பரப்புவதற்காக காந்தி வேல்ட் பவுண்டேஷன் என்ற அமைப்பை தொடங்கினோம். அதுபற்றி முதல் அமைச்சர் ஜெயலலிதாவிற்கு தெரிவித்தோம். அவர் அனைத்து மாவட்டங்களிலும் இந்த அரிய பொக்கிஷங்களை கண்காட்சியாக நடத்த எங்களுக்கு அனுமதி கொடுத்து, அதற்கான உதவிகளை செய்ய மாவட்ட கலெக்டர்களுக்கு உத்தரவிட்டிருக்கிறார். முதல் காந்திய கண்காட்சியை அண்ணா பல்கலைக்கழகத்தில் நடத்தினோம். அதனை முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் தொடங்கிவைத்து, அரிதான பொக்கிஷங்களைப் பார்த்து பாராட்டினார்" என்கிறார், ராஜேஷ்.

அப்துல்கலாம் பாராட்டிய, காந்திஜி பற்றிய உலகப்புகழ் பெற்ற 'திகைக்க வைக்கும் தேசப்பொக்கிஷங்களை' அடுத்த வாரம் போட்டோக்களுடன் காணலாம்.